**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.151/2022 பெயர் : லோகாம்பாள் நாள் : 10.08.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1: 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பிராதில் எத்தனை செட்யூல் சொத்துக்கள் கேட்டுள்ளேன் என்று தெரியுமா என்றால், தெரியாது. ஒவ்வொரு செட்யூலிலும் எத்தனை அயிட்டம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால், தெரியாது. தாவா சொத்துக்கள் எந்தெந்த கிராமத்தில் உள்ளது என்றால், மேட்டுநாசுவன்பாளையம் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளன. என்ன சர்வே எண்களில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களின் அரசாங்க வழிகாட்டி மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். தாவாவில் என்ன மதிப்பீடு போட்டுள்ளேன் என்று எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி சரஸ்வதி எனக்கு என்ன உறவு என்றால், எனது சித்தி, என் தந்தையின் இளையதாரம். என் தந்தை பெயர் ராமசாமி. என் தாயார் பெயர் துளசியம்மாள். என் தந்தைக்கு அவர் மூத்த தாரம் ஆவார். என் கணவர் பெயர் பழனிச்சாமி. 1-ம் பிரதிவாதி சரஸ்வதி என் கணவரின் அக்கா ஆவார். என் உடன் பிறந்தவர் யாரும் இல்லை. 1-ம் பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால், 1 மகன், 2 மகள்கள். மகன் பெயர் சக்திவேல். 2013-ம் வருடம் சக்திவேல் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். தாவா சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் எவை, பாட்டப்ப கவுண்டர் கிரையத்திற்கு வாங்கியவை எவை என்று என்னால் சொல்ல முடியாது என்றால், சரிதான்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**